தொடர்பாக நேற்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேற்று வேலூரிலிருந்து வெளியிடப்பட்ட 'தினமலர்' பத்திரிகையில், ''பிள்ளையார் வீடு மாறுகிறார்'' என்ற செய்தியைத் தலைப் போடு கொடுத்து, வேலூரில் திடீர் பதற்றம் கலெக்டர் முடிவால் தணிந்தது என்று முடித்திருக்கிறார்கள். எனவே சிலை அகற்றப்பட்டதால் ஏற்பட்ட சிறு அதிருப்தி, இப்போது 300 சதுர அடி இடத்தை ஒதுக்கிக் கொடுத்து ஒரு நிரந்தர மான நல்ல இடத்தை ஏற்படுத்திக் கொடுத்ததால் இப்போது பிள்ளையார் பத்திரமாக இருக்கிறார் என்பதால் மக்களுக்கும் அதிருப்தி இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

முற்பகல் 10-35 மணி.

இ) குன்னூர்ப் பகுதியில் புலியினால் மக்களுக்கு ஏற்படும் அபாயம் பற்றி உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கருப்புசாமி என்னுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்திருந்தார். இப்போது இரண்டு கால் புலிகளைப் பற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் விளக்கியிருந்தார்கள். உறுப்பினருடைய தொகுதியில் உண்மையான 4 கால் புலி ஒன்று அட்டகாசம் செய்வதாகவும் அதைச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்றும், அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டார். நேற்றைய தினமே அந்தப் புலி சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. எனவே மேற்கொண்டு இந்தப் பிரச்சினை வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே போல் மூன்று மாதங்களுக்கு முன்பும் குன்னூர் தொகுதியில் ஒரு புலி பிடிக்கப்பட்டது. இப்போது இரண்டாவது புலி பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புலி இப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டது. (பலத்த சிரிப்பு) மீண்டும் அவருடைய உத்தரவின் பேரில் இந்தப் புலி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டது. மீண்டும் இதே போன்று புலிகளின் அட்டகாசங்கள் அந்த நீலமலைப் பகுதியில் ஏற் படாமல் இருக்க நிரந்தரமான நடவடிக்கையாக ஒரு சிறு யோசனையைக் கூறிக்கொள்கிறேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு கர்நாடகா மாநிலத்தில் Environmental Study என் பதற்காக காட்டு விலங்குகளின் எண்ணிக்கை என்னவென்று கணக்கிடும் போது, விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட கழுத்துப்பட்டைகளை விலங்குகளின் கழுத்தில் அணிவித்து

அதனுடைய "migration, isclation, identification, if it is necessary easy catch" என்ற முறைப்படி அவர்கள் முயன்றார்கள். அந்தச் சமயத்தில் இரண்டு புலிகள் அங்கு இறந்துவிட்டதால் அதைப் பற்றி கர்நாடக சட்டமன்றத்தில் பெரிய பிரச்சினை எழுப்பப்பட்டு அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதே போன்று விஞ்ஞான முறைப்படி விலங்குகளுடைய கழுத்தில் பட்டைகள அணிவிக்கப்படுமானால் அந்தப் புலிகளின் நடமாட்டம் வெகுவாக கட்டுப்படுத்தப்படும். அது ஊருக்குள் நுழைந்தவுடனே பிடித்துவிடுவார்கள். காலையில் முழு உடம்போடு செல்பவர்கள் எல்லாம் மாலை வேளையில் புலிகளால் தாக்கப்பட்டு வெறும் எலும்புக் கூடுகளாக, சதைப் பிண்டங்களாக இரத்தக் கோளங்களாக மாறி வருகிறார்கள். கொல்லப்பட்ட அனைவரும், 3 பேரும் இளம் பெண்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதே போல நீலகிரி மாவட்டத்து தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரும் ஏழைப்பட்டவர்கள், பாவப்பட்டவர்கள். அவர்களுக்கு முதல்வர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து ஒரு சிறு தொகையை அளித்து அந்த ஏழைகளின் குடும்பத்தைக் காப்பாற்றவும் மிகவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் சொல்லுகிற யோசனை மீது ஏதாவது கருத்து இருந்தால் வன இலாக்கா அமைச்சர் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உய்விடங்களிலும், தேசீய பூங்காக்களிலும் கிட்டத்தட்ட 107 சிறுத்தைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல கர்நாடகா அரசில் அது ஆராய்ச்சிக்காகத்தான் பயன்பட்டு வருகிறது. அந்த வகையிலே நாம் சிறுத்தைகளைப் பிடித்து அதன் கழுத்தில் பெல்ட் கட்டுவதன் மூலம் செய்ய முடியாது. எல்லா சிறுத்தைகளையும் பிடித்து பெல்ட் கட்டி அதனுடைய மூவ்மென்ட்சை நாம் அறிய முடியாது. அந்த வகையிலே இந்த திட்டத்திற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

பரமக்குடி, இராமநாதபுரம் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வைகையாற்றில் தண்ணீர் திறந்துவிட வேண்டியதன் அவசியம் குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. டாக்டர் ச. சுந்தரராஜ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் ச. சுந்தரராஜ்.